Registered as News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 04 (21 - 10 - 1991) திங்கட்கிழமை ஓசை: 245

## பதுங்கு குழிகளை உடன் அமைக்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காப் படையினரது விமானத்தாக்குதல் எறிகணைத் தாக்குதல் ஆகிய வற்றில் இருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக உடனடியாக பதுங்கு குழிகளை அமைத்துக்கொள்ளும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ மக்கள் அனை வருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். வீடுகள், கல்விக் கூடங்கள், சந்தைகள், தொழில் ஸ்தாபனங்கள், மக்கள் கூடும் பகுதிகள் ஆகியவற்றில் "இறந்த பதுங்குகுழி"களை அமைக்கும்படியும் இத் திறந்த பதுங்குகுழிகள் ஒவ்வொன் றும் இரண்டு அடி அகலமும் நான்கு அடி ஆழமும். (4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ போராட்டத்திற்கு எதிராக சிறிலங்கா பெரும்பிரசாரயுத்தம்

### தமிழர் மனோவலிமையைச் சிதறடிக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வெகுசனத் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி தமிழருக்கு எதிரான பெரும் பிரசார யுத்தம் ஒன்றை மேற் கொண்டுள்ளது. இதன் மூலம், தமிழரின் அன்றாட வாழ்க்கையைச் சீரழித்து, அவர்களைப் பெரும் உளவியல் ரீதியான பாதிப்பிற்கு உள்ளாக்குவதோடு, அவர்களின் மனோவலி மையைச் சிதறடித்து விடுதலைப் போரில் அவர்களுக்குரிய நம்பிக்கையைக் குறைத்துவிட எண்ணுகின்றது.

வடக்கில் ஒரு பெரும் போர் ஒன்று நடைபெற்று வருவதாகவும் இராணுவம் வெற்றி மேல் வெற்றி பெற்று வருவதாகவும் பெரியளவிலான பிரசாரத்தில் சிறிலங்கா அரசாங்கம் இறங்கியுள்ளது பெரிய தொரு இராணுவமுஸ்தீபில் சிறிலங்கா இராணுவம் வடக்கில் ஈடுபட்டிருப்பினும், வெகுசனத் தொடர்பு சாதனங்கள் குறிப்பிடுவது போல் கடந்த ஓரிரு நாட்களில் பெரும் மோதல்கள் வடக்கில் நடைபெற்றதாக தமது நிலைகளைப் பலப்படுத்தி வருவதாகவும் செய்தி வெளியிட்டது. இதே வேளை இரவு 9 - 00 மணிச் செய்திப் பத்திரிகையில் கட்டைக் காட்டுப் பகுதியில் இருந்து காரைநகர் வரையிலான வட கரைப்பிரதேசம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் தெரிவித்தது. ஆனால் கடந்த ஓரிரு தினங்களில் இப் பகுதிகளில் மோதல்கள் எதும் இடம் பெற்றதாகவோ, அன்றி இராணுவம் முன்னேறியதாகவோ அன்றி பிரதேசங்களைக் கைப்பற்றியதாகவோ தகவல் ஏதுமில்லை.

சிறிலங்கா இராணுவம் கோட்டையில் நிலைகொண் (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊழியர்களை வருமாறு ச.தே.செ.சிலுவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரச படையினரின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு அஞ்சியாழ் போதனா வைத்தியசாலைக்கு சமுகம் தராமல் இருக்கின்ற சகல ஊழியர்களையும் வேலைக்கு வரும்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கேட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை யாழ் நகரப் பகுதியில் எறிகணைத் தாக்குதல் இடம் பெற்றதை அடுத்து மேற்படி வைத்திய சாலையில் பணிபுரியும் ஊழியர்களில் பலர் அச்சத்தினால் தமது வேலைகளை இடையில் விட்டு விட்டுச் சென்றமை (4 ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர் மக்களில் அநேகர் திரும்பினர்

(குருநகர்)

நேற்றுமுன்தினம் 19 10 91 இடம் பெயர்ந்து சென்ற குருநகர் மக்களில் பெரும் பகுதியினர் நேற்று (20 10 91) தமது வீடுகளுக்குத் திரும்பினர்.

குறைந்த அளவினர் வீடுகளுக்குத் திரும்பி வரவில்லை. மேலும் சிலர் காலையில் வீடுகளுக்கு திரும்பி சமைத்து உணவுகளை எடுத்துக்கொண்டு தஞ்சமடைந்துள்ள இடங்களுக்குத் திரும்பினர்.

இதேவேளை நேற்று (20 10 91) மாலை இந்தச் செய்தி எழுதப்படும்வரை நகரையும் நகரை அண்மித்த பகுதிகளிலும் எதுவித தாக்குதல் சம்பவங்களும் நிகழவில்லை. (21)

## இடம் பெயர்ந்தவர்கள் தென்மராட்சியில் அவதி

(சாவகச்சேரி)

வடமராட்சியிலிருந்தும் தீவுப்பகுதியிலிருந்தும், வெளியேறிய மக்கள் தென்மராட்சிக்கு பெருமளவு வந்து சேர்ந்துள்ளனர் பாடசாலைகள் கோயில்கள் மற்றும் பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ள இம்மக்கள் அத்தியாவசிய வசதிகள் இன்றி பெருங் கஷ்டங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

மேலும் புகலிடம் அற்ற மக்கள் வீதியோரங்களில் படுத்துறங்கி வருகின்றனர் [4 ஆம் பக்கம் பார்க்க]

### அரசின் அதிகாரம்

## லெப். கேணல் சந்தோஷம் நினைவு நாள்

லெப். கேணல் சந்தோஷத்தின் நான்காமாண்டு நினைவு நாள் இன்றாகும் இது தொடர்பான கட்டுரை நாளை எமது பத்திரிகையில் வெளியாகும்.

### சிறிலங்கா இராணுவத்துடன்

## எம்முனையிலும் போரிடத்தயார்

## வதந்திகளை நம்ப வேண்டாம்

## கார் விபத்தில் தாய், மகள் காயம்

யாழ் நாச்சிமார் கோவிலடிப்பகுதியில் இடம் பெற்ற கார்விபத்தில் இருவர் காய

## விஸ்தரிக்கப்படும்வரை நடவடிக்கை தொடரும்

### - ஹமில்டன் வணசிங்கா

(கொழும்பு)

வடக்குக் கிழக்கின் முழுப் பகுதியிலும் அரசாங்கத்தின் அதிகாரத்தை விஸ்தரிக்கும் வரை எமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை விஸ்தரிப்போம் என்று சிறிலங்கா ராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ஹமில்டன் வணசிங்கா இராணுவ நடவடிக்கைகள் பற்றி தெரிவிக்கமாட்டேன் என்றும் பொது மக்கள் பாதிக்கப்படுவதை தவிர்ப்பதற்கு நாம் கூடிய அக்கறை

[4ஆம் பக்கம் பார்க்க]

## சுத. கட்சிக்குள் குழப்பம்

## ஆராய நிர்வா. குழு கூட்டம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பங்கள் குறித்து ஆராய்வதற்காக நாளை இக்கட்சியின் மத்திய நிர்வாகக்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளதாக கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சிக் காரியதரிசிப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள சூரியப்பெருமா விவகாரமும், அநுரா பண்டாரநாயக்காவிற்கு கூடுதல் அதிகாரம் வழங்கக்கூடும் விடயமும் குழப்பத்தை ஏற்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது

(4ஆம் பக்கம் பார்க்க)

இல்லை

நேற்று மாலை சிறிலங்கா வானொலி யாழ். நகரப்பகுதியில் இராணுவத்தினர் பலமான நிலையில உள்ளனர் எனவும், தெல்லிப்பழை, இயக்கச்சிப் பகுதிகளில், இராணுவம்

## வதந்திகளை நம்ப வேண்டாம்

### விடுதலைப்புலிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

எந்த முனையிலும், எந்த இராணுவ நடவடிக்கையையும் சந்திக்க விடுதலைப்புலிகள் தயாராகவே இருக்கின்றார்கள் முன்னேறுவார்கள் என்று கருதப்படும் முனைகளில் எங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தியுள்ளோம். குடாநாட்டின் எந்தக்குச் சொழுங்கையால் எதிரி புறப்பட்டுவந்தாலும் வந்தவுடன் எதிர்ப்பைக் காட்டும் பலத்துடன் புலிகள் பார்த்திருக்கின்றனர். எனவே வதந்திகளை நம்பி நீங்கள் திக்கற்ற பறவைகளாக அலையாதீர்கள் என விடுதலைப் புலிகளின் அரசியற்பிரிவு தமிழ் மக்களுக்கு நேற்று துண்டுப் பிரசுரம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும் இத்துண்டுப்பிர சுரத்தில் உங்கள் வீடுகளுக்கு மேலாகவும், வீதிகளுக்கு மேலாகவும் குண்டுவீச்சு விமானங்களும், உலங்குவானூர்திகளும் 'உயிர்ப்புலி' தேடி மேய்ந்து திரிகின்றன. எதி

(4ம் பக்கம் பார்க்க)

## 300 இலங்கைத் தமிழர்கள் தாய்லாந்தில் அவதி

(கொழும்பு)

தாய்லாந்தில் 300 இலங்கைத் தமிழ் அகதிகள் மிகவும் கஷ்டமான ஒரு நிலையில் உள்ளனர் என கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

இலங்கையிலிருந்து மேற்கு நாடுகளுக்கு செல்வதற்காக செல்பவர்கள் தாய்லாந்திற்கு சென்று தான் போவார்கள் என்றும் கூறப்படுகிறது.

முகவர்களால் கூட்டிச் செல்லப்படும் இவர்கள் அங்கு கைவிடப்பட்டு அகதிகளாக மேற்கு நாடுகளுக்கு செல்ல முடியாமல் கஷ்டப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## பாடசாலை சுற்றிவளைப்பு; 100 தமிழர்கள் கைது

அக்கரைப்பற்றில் பாடசாலை ஒன்றை முற்றுகையிட்ட சிறிலங்காவின் விசேட அதிரடிப்படையினர் அங்கிருந்த மாணவர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை அக்கரைப்பற்று, கோளாவில் விநாயகர் மகாவித்தியாலயத்தில் வருடாந்தப் பரிசளிப்பு விழா நடைபெற்றுக்கொண்டிருந்தபோது இப்பாடசாலையை அதிரடிப் படையினர் திடீரென முற்றுகையிட்டு இவ்விழாவுக்கு வந்திருந்த மக்களில் இளைஞர்களையும் இப்பாடசாலை மாணவர்கள் சிலரையுமாக நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்களைக் கைது செய்து அழைத்துச் சென்றனர். இவர்களில் 36 பேரை தொடர்ந்தும் தடுத்து வைத்துள்ளனர் ஏனையவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

### முன்னாள் அமைச்சர் வின்சன்ட் பெரேரா

## வட.பொருள்கள் அனுப்ப உதவினார் ராணுவ அதிகாரிகளிடம் விசாரணை

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் புனரமைப்பு புனர்வாழ்வு அமைச்சராக இருந்த வின்சன்ட் பெரேராவின் அநுசரணையுடன் வடபகுதிக்குத்தடை செய்யப்பட்ட பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் பற்றி பல சிறிலங்கா ராணுவ அதிகாரிகளை இரகசிய பொலிசார் விசாரித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

20,000 பெரிய பக்கற்றுகளில் கற்பூரம், 25,000 லிட்டர் கற்பூரத்தூள், 150 றிம் வெள்ளைக் கடதாசி, 1000 றிம் சிறந்த ரக கடதாசி, 1000 பக்கற் கட்டெழுத்துக் கடதாசி, 2000 பக்கற் றோணியோ கடதாசி, 20 ரின் அச்சிடும் மை ஆகியவையும் வட

(4ஆம் பக்கம் பார்க்க)

காரியத்தில் இருவர் காயமடைந்தனர்

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த லெட்சுமி (52) இவரது மகன் சந்திரவதனி (20) ஆகிய இருவருமே காயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் சைக்கிளில் வந்து கொண்டிருந்த சமயம் இவ்விபத்து இடம் பெற்றது என தெரிவிக்கப்பட்டது. (தி)

## மக்கள் பதற்றமடைவதில் அர்த்தம் எதுவுமில்லை

(நல்லூர்)

சிறிலங்கா அரசு தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் மேற்கொள்ளும் பிரசாரங்கள் குறித்து எவ்வகையிலும் பதற்றம் அடைவதில் அர்த்தமில்லை. இன்றைய அசௌகரியங்கள், துன்பங்கள் என்பதை மனதில்நிறுத்தி அனைத்து மக்களும் மன உறுதி குன்றாது இருக்குமாறு தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம் அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது

யாழ் குடாநாட்டில் பல்வேறு பகுதிகளில், இருந்தும் இடம் பெயர்ந்து வந்திருக்கும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள துயரத்தில் தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியமும் பங்கு கொள்வதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது

## செஞ்சிலுவை வாகனம் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகனத்தொடர் மீது சிறிலங்கா விமானப் படையினது உலங்கு வானூ

(4ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை மாணவர் உதவி

இருபதிற்கு மேற்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வடமராட்சிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு ஆரம்ப சுகாதாரத்தை கவனிக்கும் நோக்குடன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் இவர்கள் வரணி, மிருசுவில் போன்ற இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (75)

### சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி

## விமானக் குண்டு வீச்சு தந்தை மகன் உட்பட மூவர் பலி

(சித்தன்கேணி)

சித்தன்கேணி, மாகியப்பிட்டி ஆகிய பொது மக்கள் வாழும் பகுதிகள் மீது சிறிலங்கா விமானப்படையினரின் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல் நடத்தியதில்வயோதிப பெண், குழந்தை உட்பட மூன்று பொது மக்கள் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்திருக்கின்றனர்.

நேற்றுக் காலை 9-மணியளவில சித்தன்கேணிப் பகுதியில் வட்டமிட்ட இரு குண்டு வீச்சு விமானங்கள் சித்தன் கேணிச் சந்திக்கு அண்மையில் உள்ள வீடுகள் மீது பல தடவைகள்

(4ஆம் பக்கம் பார்க்க

## நாலாம் ஆண்டு நினைவு தினம்

(ஈச்சமோட்டை)

யாழ் போதனா வைத்திய சாலையில் 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட வைத்திய சாலை டாக்டர்கள், தாதிகள் ஊழியர்கள் போன்ற 21 பேரினதும் 4ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று திங்கட்கிழமை யாழ் போதனா வைத்தியசாலையில் நினைவு கூரப்படவுள்ளது. மேற்படி இறந்த 21 பேரினதும் உருவப்படங்களுக்கு வைத்தியசாலை ஊழியர்கள் இன்று மலர் மாலை அணிவித்து தங்களது அஞ்சலியைச் செலுத்துவார்கள் எனத்தெரிவிக்கப்பட்டது. (43)

## முகாமைத்துவ பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

பாட இணைப்பாளர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி நெறி இன்று திங்கட்கிழமை (21 10 91) தொடக்கம் எதிர்வரும் நவம்பர் இருபதாம் திகதி வரை நடைபெறவுள்ளது. 1ஏபி, 1சி மகாவித்தியாலய பாடசாலைகளை சேர்ந்த பாட இணைப்பாளர்களுக்கான இப்பயிற்சி நெறி இடம்பெறும் கால அட்டவணை யாழ் கல்வித்திணைக்களம் வெளியிட்டுள்ளது.

## அவசரகால தாதியர் சேவை

அவசரகால தாதியர் சேவையில் பணியாற்றுவதற்கு தாதிகள் தேவைப்படுகின்றார்கள். சாயி மருத்துவக்கல்லூரியில் பயின்ற, பயிலுகின்ற உதவித் தாதியர்களை அதன் அதிபர் அவசரமாக அழைத்திருக்கின்றார். உடன் அதிபருடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

## 3 இலங்கைத் தமிழர் தப்பி ஓட்டம்

மதுராந்தகம் சிறையிலிருந்த மூன்று இலங்கைத் தமிழ் இளைஞர்கள் தப்பியோடியுள்ளதாக அறிவிக்கப்

திருக்கோணமலை மாவட்டத் தளபதியும், மத்திய குழு உறுப்பினரும், முதுபெரும் கெரில்லா போராட்ட வீரருமான

## தளபதி லெப். கேணல் சந்தோசம் மாஸ்டர் அவர்களது நினைவாக...இது.



வீரஜனனம்
04.01.1959

வீரமரணம்
21.10.1987

## "நீவீர் ஈந்த சக்தியால் இவ்வுலகை அசைப்போம்!!"

தமிழீழமெங்கிலும் உன்புகழ் பரவியது!
பழம்பெரும் வீரன்! உன் வீரம் திசையெங்கும் முழங்கிற்று
பன்னெடுங்காலமாய் பரிதவித்த திருமலை மக்களின
கண்ணீரைத் துடைக்க நீ! சுற்களிலும், முற்களிலும்,
- பாதமிட்டாய்

பாசறைகள் பல அமைத்தாய்; பலபொதி நீ சுமந்தாய்
விண்ணுக்கும் மண்ணுக்குமாய் நீ அலைந்து எம்
விடிவைத் தேடினாய்; விரைந்தே சென்றாய்; வீறுடன்
விளக்கேற்றும் போதிலெல்லாம் உனை நினைத்திருந்தார்
- எம்மக்கள்

விளக்கணைந்த போதினிலே நீமட்டும்விழித்திருந்தாய்;
எம்மக்களைக் காக்க எல்லையிலே நடைபோட்டாய்
எட்டிநுழைந்த சிங்களரின் கால்முறித்தாய்; எம்மினிய
கிராமங்களின் ஓரங்களிலே எதிர்ப்படை துரத்தினாய்
உன் வீரவரலாற்றை எழுத பலநூறு எழுத்தாணியும்
- போதாது

படையோடு நீ சென்று படைத்திட்ட வெற்றிகளே
- பலவுறோ;

நீ பயிற்றிய பலநூறு வீரர் உன்பாதை தொடர;
நீ வீரமரணமடைந்தும் வாழ்கிறாய் எம்மோடு
நீர்பாய்ச்சி நீ வளர்த்த பயிர்கள் இன்று வளர்ந்து உன்

## வாகன வாடகைக்கான கூறு விலைகோரல்

கொழும்பு, அனுராதபுரம், வவுனியா, கஞ்சி பங்களிலிருந்து பசளை, விவசாய இரசாயனப் பொருள்கள், மண்ணெண்ணெய் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை முல்லைத்தீவு மாவட்டத்தில் என்னால் குறிப்பிடப்படும் இடங்களுக்கு ஏற்றி வருவதற்கு லொறிக் கூலிக்கான கூறுவிலை லொறி உரிமையாளர்களிடமிருந்து 1991 நவம்பர் 4 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புமாறு கோரப்படுகின்றது.

விண்ணப்பங்கள் பின்வரும் விபரங்களைக் கொண்டிருக்கவேண்டும்.

1. விண்ணப்பதாரியின் பெயரும் விலாசமும்.
2. ஒரே முறையில் வாடகைக்கு விடக்கூடிய லொறிகளின் எண்ணிக்கை.
3. கோரப்படும் லொறிக்கூலி
   - 3.1 தொன் ஒன்றுக்கு ஒரு மைலுக்கான கூலி முழுத்தூரத்துக்குமான கூலி
   - 3.2 கொழும்பு - புதுக்குடியிருப்பு/துணுக்காய்
     அனுராதபுரம் - புதுக்குடியிருப்பு/துணுக்காய்
     வவுனியா - புதுக்குடியிருப்பு/துணுக்காய்
4. தாமதக் கட்டணம் - நாளொன்றுக்கு

இ. தர்மகுலசிங்கம்
அரசாங்க அதிபர்
முல்லைத்தீவுமாவட்டம்

(B/3360)

## நினைவு கூருகின்றோம்



## அறிவித்தல்

வேலணை ப.நோ.கூ. சங்க ஊழியர்கள் அனைவரும் இன்று 21-10-91 காலை 9.00 மணிக்கு 295/35 மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள அவர்களது தற்காலிக அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்;
தலைவர்

B/3359)

தாவரவியல்
ஐங்கரநேசன்
யூனிவேர்சல்
கந்தர்மடம் —— யாழ்ப்பாணம்

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 10 - 21**

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் எதிர்பாராத விதமாக கைக்குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த

**தவநாதன்** (மாசிலாமணி கிருஷ்ணதாஸ்-பன்றுளம்)

**கிளியன்** (பராக்கிரம லிங்கன் - விஸ்வமடு)

கோண்டாவில் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**லெப். கேணல் சந்தோசம்** (கணபதிப்பிள்ளை உமைநேசன் - அரியாலை)

யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து அண்மையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரமரணமெய்திய

**லிங்கேஸ்** (மகாலிங்கம் லிங்கேஸ்வரன் - உரும்பராய்)

யாழ். மருத்துவ மனைக்குள் புகுந்த இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட மருத்துவர்கள், மருத்துவமனை ஊழியர்கள், நோயாளிகள் உட்பட நூற்றுக்கணக்கான தமிழர்கள்

உரும்பராயில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 சிறுவர்கள் உட்பட 6 தமிழர்கள்

1988 ஆம் ஆண்டு முதாரில் இந்தியப் படையின

யே டியுள்ளதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது.

**சந்திர கும்ப திருவிழா**

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் சந்திர கும்பதிருவிழா எதிர்வரும் புதன்கிழமை (23. 10. 1991) இரவு 8 மணிக்கு நடைபெறும் இதற்கான சகல ஏற்பாடு களையும் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் மேற்கொண்டுள்ளது. (44)

நீர்பாய்ச்சி நீ வளர்த்த பயிர்களை இன்று ...
வீரத்தைப் பின்தொடர்வது உனக்குத் தெரியும்
மாவீரனே!! உன்கனவுகள் எம்மிகஒன்றிவிட்ட ஒன்று;
நீ விதைத்த வீரவிதைகள் எமக்கூட்டிய சக்திகொண்டு
இவ்வுலகையும் நாம் அசைப்போம் அது உறுதி
ஆமாடீ!! இவ்வுலகையும் அசைப்போம்; உன்சக்தியால்.

"புலிகளின் தாகம்; தமிழீழத்தாயகம்"

—திருமலை மக்கள்.

(B/3355)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி







| திரு. | திருமதி | செல்வி |
|---|---|---|
| தொமஸ் பேரின்பநாயகம் வஸ்தியாம்பிள்ளை (சக்தியன் பத்தகசாலை உரிமையாளர்) | பேர்ள் அரியமலர் வஸ்தியாம்பிள்ளை | நொயலா விஜயந்தி வஸ்தியாம்பிள்ளை |
| பிறப்பு 22.09.1921 | பிறப்பு 11.07.1927 | பிறப்பு 04.02,1967 |

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தினால்
அழிப்பு 22 10.1987 அழிப்பு 21.10.1987

ஆண்டுகள் நான்கு சென்றிடினும் உங்கள் இனிய நினைவுகள் எம்மைவிட்டு நீங்காது திருப்பலி 21 10 91 காலை 6 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

390 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்புப்பிள்ளைகள், சகோதர, சகோதரிகள். (R/1863)



## லெப்.கேணல் சந்தோசம் மாஸ்டர்

### அவர்களின் 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 04 01.1959 | 21.10.1987 |

அரியாலை பெற்றெடுத்த அரும்புதல்வா சந்தோசம்
திருமலையின் தளபதியாய் திரளென்ற பேரெடுத்தாய்
- அன்னை

தமிழுக்கு நேர்ந்த கதி தனக்கென்று நினைத்தவன்-நீ
தாரணியில் வேங்கையணி தனைத்திடவே உதித்தவன்
- நீ

நீ பட்டினி கிடந்து பலதூரம் நடந்து சென்று
காடு மலை நதிகள் தாண்டி களம் கண்டகதைகள்
நூறு

நீ தமிழுக்காய் உயிர் கொடுத்தாய் - இந்த
தரணியிற் விடிவிற்கோர் வித்திட்டாய்
உனை அழித்து விட்டாலும் உமைநேசா உன்
ஒளியழித்து விடவில்லை
தனை அழித்து விட்டாலும் தமிழ் அழிக்க இடம்
கொடாத

வீர மறவேங்கை சந்தோசம் நின் வீரமது
வாழ்க! வாழ்க!

(B/3357) திருக்கோணமலை இடம் பெயர்ந்த மக்கள்

டானியல் (இராசநாயகம் கெனடிகாந்தன் - காரைதீவு)

கல்லடியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப் பின் போது வீரமரணமெய்திய

2ஆம் லெப். திலக் (பே. குபேந்திரன் - கல்லடி மட்டக்களப்பு)

இதே சம்பவத்தில் சயனைட் உட்கொண்டு வீர மரணமெய்திய

உதயன் (சி. உதயகுமார் - நாவற்குடா, மட்டக்களப்பு)

மாவிலாறுதுறையில் இந்தியப் படையினர் மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரமரணமெய்திய

உதயன் (தெய்வேந்திரன் உதயசூரியன் - காரைநகர்)

யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல் லப்பட்ட எமது ஆதரவாளர் யூட் மரியதாஸ் செல்வராசா (மடம் வீதி, யாழ்ப்பாணம்)

வல்வைவெளியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழீழ மக்கள் மன்றத் தலைவரும், தேசபக்தருமான ம. கௌனந்தசுந்தரன்

1989 ஆம் ஆண்டு அம்பாறையில் தேசவிரோதி களால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1990 ஆம் ஆண்டு பலாலி முகாம் சிறிலங்கா படையினருடனான நேரடி மோதலில் வீரமரண மெய்திய

லிங்கம் (முத்தையா மோகனராஜ் - இட்டாம்பிட்டிய)

மூத்து

ஆனையிறவு முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

2ஆம் லெப். அப்பன் (கதிர்காமநாதன் கலைச்செல்வன் - வண்ணான்கேணி, பளை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/3358)

※ சிந்தனைக்கு ※

சிந்தித்துத்திட்டம் வகுக்காதவன் வாயிலருகே வந்து நிற்கும் துன்பங்களை சந்திக்க வேண்டியிருக்கும்

- கன்ஃபூஸியஸ்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 21-10-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

## சற்று சிந்திக்கவும்

நேற்று முன்தினம் யாழ். நகரில் ஒரே பரபரப்பு. காலையில் இருந்து நண்பகல் வரை நகரிலும், அதன் கரையோரப் பகுதியிலும் இருந்த மக்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறிக் கொண்டிருந்தார்கள். இதே வேளை யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயத்தினுள் இருந்த நகர வர்த்தகர்களும் தமது கடைகளில் இருந்து பொருள்களை ஏற்றிக் கொண்டிருந்தார்கள் யாழ். ஆஸ்பத்திரி உத்தியோகத்தர்கள் பலர் வெளியேறினர்.

இவ்வாறான மக்கள் வெளியேற்றத்திற்கும், பரபரப்பிற்கும், பதற்றத்திற்கும், காரணம் மண்டைதீவிற்கு சிறிலங்கா இராணுவம் வந்தமையும், அதைத் தொடர்ந்து யாழ். நகருக்குள் இராணுவம் நுழையப் போகின்றது எனப் பரப்பப்பட்ட வதந்தியுமே ஆகும்.

சிறிலங்கா இராணுவத்தின் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளை கேள்வியுற்றிருக்கும் மக்கள் அதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு முற்படுவது என்பது இயற்கைதான் ஆனால், அதற்காக வதந்திகளை நம்பியும், யாரோ விஷமிகள் செய்யும் பிரசாரங்களினாலும், எதுவித முன்யோசனையும் இன்றியும் மக்கள் பதற்றப்படுவதும், திசை தெரியாமல் ஓடுவதும் தான் வருத்தமளிக்கும் விடயமாகும்.

மண்டைதீவிற்கு இராணுவம் வந்துள்ளமையால் குருநகர் பகுதியின் கரையோர மக்கள் எதிரிகளைத் தாக்குதலுக்கும், துப்பாக்கிச் சூட்டிற்கும் அஞ்சி வெளியேறின் அது ஓரளவு ஏற்புடையதொன்றாகும். ஆனால் அவர்களும் அல்லோலகல்லோலப்பட்டு ஓடுவதற்கு எதுவும் நேற்று நடக்கவில்லை. இதேவேளை யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயத்தினுள்ளும் உள்ளவர்களும் நகர் சுற்றுப்புறங்களிலும் உள்ளவர்களும் வெளியேறுவது என்பது ஒருவித முன்யோசனையும் அற்ற செயல் எனக் கூறின் தவறில்லை.

யாழ் நகரம் தமிழ் மக்களின் பிரதான மையங்களில் ஒன்று. இந்தக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியை மீட்பதற்காக கடந்த வருடம் பல நூறு போராளிகளை களப் பலியிட்டே நாம் அதை மீட்டெடுத்தோம். யாழ். கோட்டையில் இருந்த சிறிலங்கா

# 87 இந்திய கொலைக்கரம்

**21-10-87**

அன்று தீபாவளி நாள் ஆனால் ஆஸ்பத்திரியின் வரலாற்றிலும் தமிழர்களின் சரித்திரத்திலும் மறக்கமுடியாத கரிநாளாகி விட்டது. 10-10-87 அன்று விடுதலைப் புலிகளுக்கும் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்குமிடையில் ஆரம்பமான போரைத் தொடர்ந்து காலவரையற்ற ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டது. ஆஸ்பத்திரிக்குக் கூட மின்சாரம் முற்றாக துண்டிக்கப்பட்டது. வைத்தியநிபுணர்கள், வைத்தியர்கள், தாதிகள், ஊழியர்கள் அனைவருமே தமது சேவை இப்படியானதொரு இக்கட்டான நிலையில்தான் மிக அவசியமாகத் தேவைப்படும் என்பதை உணர்ந்து, தமது நடமாட்டங்களைக் குறைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குள்ளேயே இருக்க முயற்சித்தனர். இதற்கு இன்னொரு முக்கிய காரணமும் இருந்தது. இப்படியான ஒரு இராணுவ நடவடிக்கையின்போது வீடுகள், பள்ளிக்கூடங்கள், ஏன் கோவில்களை விட ஆஸ்பத்திரிதான் மிகவும் பாதுகாப்பான இடம் என்கிற நம்பிக்கை அனைத்து தரப்பிலும் இருந்தது அதுவும் உலகிலேயே நான்காவது மிகப்பெரிய இராணுவம் 'அமைதிப்படை' என்ற பெயரில் வந்திருக்கிறது எனவே ஒரு இராணுவத்திற்குரிய 'மரபுகளையும்' 'கோட்பாடுகளையும்' மதித்து, நோயாளிகளைப் பராமரிக்கும் ஆஸ்பத்திரிக்குள்ளே எந்தவித இராணுவ நடவடிக்கையும் மேற்கொள்ளாது என்றுமிக உறுதியாக நம்பினர். அதனால் தான் சிலர் தமது உறவினர்களைக்கூட ஆஸ்பத்திரிக்குள் கூட்டிக் கொண்டுவந்து வைத்திருந்தனர்.

### அன்று உண்மையில் நடந்தது என்ன?

10-10-87 ஆரம்பித்தசண்டை வரவர மிக உக்கிரமடைந்து 21-10-87 காலை 6.30 மணியளவில் திடீரென 'ஷெல்'

## வைத்தியசாலையிலிருந்து மருத்துவர் குறிப்பு

செய்தனர். கடுமையான 'ஷெல்' தாக்குதல்களும் துப்பாக்கிப் பிரயோகங்களும் நடந்துகொண்டிருந்ததால் மேல்மாடிகளிலிருந்த அனைவரும் கீழே இறங்கி சீமேந்துக்கூரையாலான கட்டடங்களுக்குள் தஞ்சம் புகுந்தனர்.

**மாலை 4-10**

தேநீரோ. சாப்பாடோ இன்றி எல்லோரும் அப்படியே இருந்த இடத்தில் என்ன நடக்குமோ? ஏது நடக்குமோ என்று பயந்து கொண்டிருக்க திடீரென பலத்த துப்பாக்கிப் பிரயோகம் ஆஸ்பத்திரி வளவினுள் கேட்டது. அப்போது கூட டாக்டர் கணேசரட்ணம் "ஆமிக்காரன் நிச்சயமாக ஆஸ்பத்திரிக்குள் சுடமாட்டான். ஒருவேளை உள்ளே வந்து விசாரணை செய்வான்...!" என்றே நம்பிக்கையாக பதற்றமடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறினார் ஆனால் அப்படி சொல்லி முடிப்பதற்குள், நோயாளிகளின் "ஐயோ – சுடவேண்டாம்... நாங்கள் நோயாளிகள் நாங்கள் அப்பாவிகள்..." என்ற அவல ஓலம் பலரையும் திடுக்கிட வைத்தது. இயந்திர துப்பாக்கிகளின் கடுமையான துப்பாக்கிப் பிரயோகம் ஆஸ்பத்திரி கட்டடங்களை அதிரவைத்தது. அழுது புலம்பியவர்கள் அனைவருமே கண்மூடித்தனமாக ஒரு சில வினாடிக்குள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதனைத் தொடர்ந்து பயங்கரமான நிசப்தம். கொலையாளிகளின் இனம் புரியாத 'பாஷையும்', இரும்புச் சப்பாத்துக்களின் நடையொலியும், துப்பாக்கிகளை கையாளும் சத்தங்களுமே கேட்டுக் கொண்டிருந்தன. வைத்தியர்களின் விடுதியின் கதவுகளையும் யன்னல்களையும் உடைத்து ஆக்கிரமித்துக் கொண்டார்கள். இறந்தவர்களுக்கோ கடுமையாகக்

"நிச்சயமாக சுட்டிருக்கமாட்டார்கள்... ஒருவேளை பணயக் கைதிகளாக... பிடித்து வைத்திருப்பார்கள்... என்று கூறிக்கொண்டே சுடுபட்டு இறந்து கிடந்தவர்களிடம் வந்தார். அவர் வருவதைக் கண்டதும், காவலுக்கு நின்ற சிப்பாய் ஒருவன் தனது துப்பாக்கியை ஆயத்தம் செய்ததும், அவனுடைய கொடூரத் தன்மையை உணர்ந்தவராய், "...நான்... குழந்தை வைத்தியர் டாக்டர் சிவபாதசுந்தரம்... இங்கு... கடமை புரிபவர்..." என்று சொல்லிமுடிப்பதற்குள் அவன் அவரைச் சுட்டுவிட்டான் ஐயோ – சுடவேண்டாம்..." என்று அலறியவர் சுடுபட்டதும் "..ஐயா.. முருகா... தண்ணி தண்ணி.." என்று எதுவித உதவியும் கிடைக்காமல் இறந்து போனார். இதுபற்றி பின்பு இராணுவ உயர் அதிகாரி ஒருவரிடம் எமது வைத்திய நிபுணர் கேட்டபோது "ஒருவேளை உங்களுடைய ஆட்களே ((Your own People) எங்கள் மீது பழிபோடுவதற்காக சுட்டுவிட்டு ஓடியிருக்கலாமே?" என்றார்

முதல்நாள்...66 பேரைக் கொன்று ஆஸ்பத்திரிக் கட்டடத்தைக் கட்டுப்பாட்டுக்குள் எடுத்த பின்னர் மறுநாள் காலை ..டாக்டர் சிவபாதசுந்தரத்தை ஏன் கொன்றீர்கள்...என்று கேட்டதற்கு "டாக்டர் என்று சொன்னது எமது சிப்பாய்க்கு புரியவில்லையாக்கும்..." என்றார்.

ஆங்கிலம்தான் புரியாவிட்டாலும் .....ஆஸ்பத்திரி கட்டடம் ஒன்றுக்குள் 50வயது மதிக்கத்தக்கவர், வெள்ளைகோர்ட்டும் டையும் அணிந்து கழுத்தில் ஸ்டெதஸ்கோப்பும் போட்டுக்கொண்டு இரண்டு கைகளையும் உயர்த்திக் கொண்டு வருபவரையுமா? டாக்டர் என்று உங்கள் சிப்பாய்க்கு புரியாது? என்றார்

எழுந்து வாருங்கள்..." என்று உத்தரவிட்டார் அப்போதும் பயந்து பயந்து. ஆனாலும் வேறுவழியின்றி எஞ்சியவர்கள் எழுந்து வந்தோம். அனைவரையும், நன்கு பரிசோதித்த பின்னர், பழைய 25ஆம் வார்ட்டுக்கு அழைத்துச் சென்றார்கள் அப்போதுதான் டாக்டர் கணேசரத்தினம் இறந்துவிட்டது புரிந்தது எங்குஎப்போது பிரச்சினை என்றாலும், தனக்கு வேலை முடிந்தாலும் ஓய்வு நாள் என்றாலும் வீட்டிலிருந்து உடன் ஆஸ்பத்திரிக்கு கடமைக்கு வரும் பண்பு பலருக்கும் தெரியும்.

முதல் நாள் கூட, தனது தாயாரை கண்டிக் குளியிலிருந்து நல்லூரில் கொண்டு சென்று விட்டு, இரவோடு இரவாக ஆஸ்பத்திரிக்குத் திரும்பியவர் இறுதியில் கூட, "ஆமி... சுடுறான் கீழே படுங்கோ எல்லோரும்......" என்று சொல்லிவிட்டு, மற்றவர்களைக் காப்பாற்ற உதவிசெய்து தன் உயிரை விட்டவர்.

**23.10.87 அதிகாலை**

அதிகாலையிலேயே, வைத்தியர்களினதும், ஊழியர்களினதும் உதவிகொண்டு இறந்த அனைவரையும், ஒவ்வொன்றாக மீட்டு அவர்கள் போட்டிருந்த ஆபரணங்கள் மணிக்கூடு மற்றும் ஆவணங்களை எடுத்து அனைத்து உடல்களையும் ஆஸ்பத்திரியின் பின்புறவாசலுக்கருகில் ஒன்றாகபோட்டு, இறந்தவர்களுக்கு இறுதியாக செய்யும் எதுவித தமிழ் மரபையோ கடமைகளையோ இன்றி பெற்றோல் ஊற்றி தகனம் செய்தனர்.

இராணுவ அதிகாரியிடம் இறந்தவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு அறிவித்து இறுதி அஞ்சலிக்காவது ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள் என்று கேட்டதற்கு "இப்போது நடப்பது யுத்தம்.. இப்படியான சூழ்நிலையில் சம்பிரதாயங்களுக்கும்...சடங்குகளுக்கும்.. நேரமுமில்லை இடமுமில்லை... தேவையுமில்லை" என்று கடுமையாக கூறினார்கள். அதிகாலையிலிருந்தே அவசர அவசரமாக இறந்த உடல்களை அப்புறப்படுத்தி தீ மூட்டினார்கள்.

நண்பகல் போல் அந்த உயர் இராணுவ அதிகாரிகளும் பத்திரிகை நிருபர்களும் ஆஸ்

இராணுவம் தானாக வெளியேறவில்லை. விரட்டி அடிக்கப்பட்டது. சிறிலங்கா இராணுவம் தன்னால் ஆன முழுப்பலத்தையும் திரட்டிப் போரிட்டும், தோல்வி கண்ட நிலையிலேயே யாழ். கோட்டையை விட்டு ஓடியது.

இவ்வாறு பெரும் போரின் பின் கைப்பற்றிய பகுதியை இராணுவம் வந்ததும் உடன் விட்டுச் சென்று விடுவ தென்பது இலகுவான காரியமாகுமா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும். கடந்த முறையும் தான் மண்டைதீவு வரையில் இராணுவம் வந்தது. ஆனால் இராணுவத்தால் யாழ். நகரிற்குள் பிரவேசிக்க முடியவில்லை. கடந்தமுறை யாழ் நகரிற்குள் புக முனைந்த இராணுவத்திற்கு கோட்டை முகாம் பாதுகாப்பு அளிக்க இருந்தது. இன்று அந்தநிலையும் இல்லை.

இந்தநிலையில், யாழ். நகரிற்குள் இராணுவம் பிரவேசிப்பது என்பது மிகவும் கடினமான காரியமாகவே இருக்கும் என்பதை மக்கள் ஏன் சிந்திக்கவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கின்றது. இராணுவத்தை புலிகளால் தடுத்து நிறுத்த முடியாது என மக்கள் கருதுவதாக இருப்பினும் யாழ் நகரிற்குள் இராணுவம் வெகு இலகுவாக ஒரு சத்தம், சந்தடியின்றிப் புகுந்து விடுவதென்பது சாத்தியப்படப் போவதில்லை என்பதை உணராத அளவிற்கு அச்சம் மக்களின் சிந்தனையை மழுங்கடித்து விட்டதா?

ஆனையிறவில் சாதகமான புவியியற் சூழலில் சில மீற்றர்கள் முன்னேற சிறிலங்கா இராணுவத்திற்கு ஒரு மாதம் வரையில் சென்றதை மக்கள் மறந்து விட்டது போல் தெரிகின்றது. அதேவேளை ஆனையிறவைவிட யாழ். நகரைப் பொறுத்து சற்று சாதகமான புவியியற் சூழல் எமக்கு உண்டு என்பதை அவர்கள் ஏன் உணரத் தவறியுள்ளனர்.

மக்கள் அனைவரும் மனோதிடம் மிக்கவர்களாக, பீதி அற்றவர்களாக இருக்க முடியாதுதான். ஆனால், அவர்கள் ஓரளவேனும் சிந்தித்து, தீர விசாரித்து முடிவு எடுத்தலே அவர்களுக்கும் நல்லது, போராட்டத்திற்கும் நல்லது. இதைவிடுத்து சிந்திக்காமல் வதந்திகளையும், புரட்டுக்களையும் நம்பி, சிந்தனை எதுவுமின்றி தீர்மானம் எடுப்பின் அவர்கள் மேலும் மேலும் சிரமத்திற்கு உள்ளாக வேண்டி வருவதோடு விஷமிகளும், திருடர்களும், துரோகிகளுமே நன்மை அடைவார்கள் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஒன்று பெண்களுக்குரிய சத்திரசிகிச்சை வாட்டான 8ஆம் வாட்டுக் கூரை மீது வீழ்ந்து கூரை தரையிறங்கியது அறு பதிற்குமேல் இருந்த நோயாளிகளில் 4 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்கள். 38 பேர் படுகாயமடைந்தார்கள்; அவர்களை அப்புறப்படுத்தி அவர்களுக்குரிய அவசர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அப்போது கூட பலர், இராணுவம் இந்தக் கடைசி பத்துநாட்களில் அப்பாவிமக்கள் எத்தனைபேரை வயோதிபப் பெண்கள், சிறு குழந்தைகள் என்று பாராமல் சுட்டும் சித்திரவதைப்படுத்தியும், எரித்தும் அட்டூழியங்கள் புரிகிறதென்பதை கதைத்தது பலருக்குக் கேட்டது. இராணுவம் 'கற்பழிப்பில்' ஈடுபட்டது கூட பலருக்குத் தெரியும். ஆனாலும் அது பொய்யாகவும் இருக்கும். ஆஸ்பத்திரிக்குள் அப்படியொன்றும் நடக்காது, என்று நம்பிக்கையை வளர்த்துக் கொண்டனர். திடீரென்று 8 30மணியளவில் இன்னொரு 'ஷெல்' குண்டு சத்திர சிகிச்சை நிலையத்தின் யன்னல் ஒன்றை உடைத்துக் கொண்டு உள்ளே வந்து வீழ்ந்தது. அத்துடன் பலருக்கு நம்பிக்கை குறைந்து அனைத்து வேலைகளையும் இடைநிறுத்தி பாதுகாப்பான இடங்களை தேடி தஞ்சம் புகுந்தனர். தாதிகள், அரசி, லீலா ஆகியோர், இறுதிவரை மனத்துணிச்சலோடும் உறுதியோடும் காயப்பட்டவர்களையும், உதவி தேவைப்படுபவர்களையும் காப்பாற்றி உதவி

...டாருந்தவர்களுக்கோ எந்த விதமான உதவிகளும் இடைக்கவில்லை. உயிருடன் எஞ்சியிருந்தவர்களின் கூட அவர்களுக்கு உதவி செய்ய முடியவில்லை. சிறு அசைவு, சிறு சத்தங்கள் கூட காவலுக்கு நின்றவர்களின் துப்பாக்கியைச் சுடத் தூண்டியது தண்ணீருக்காக அழுத குழந்தையும், மாரடைப்பால் வலி

**மாறன்**

யுற்று உதவிகேட்டு அழுத 70 வயது வயோதிபரும் அவ்வாறு சுடப்பட்டார்கள் இரவுபூராக இறந்தவர்களோடு இறந்தவர்களாக இரத்த வெள்ளத்தில் உயிருடன் இருந்தவர்களும் காயப்பட்டவர்களும் ஒன்றாகக் கிடந்தார்கள்; தொடர்ந்தும் இரவிரவாக கடுமையான 'ஷெல்' தாக்குதல்களும் துப்பாக்கிப் பிரயோகங்களும் ஆஸ்பத்திரிக்குள்ளேயும் வெளியேயும் கேட்ட வண்ணமே இருந்தது. எந்தநேரம் ஏது நடக்குமோ? என்கிற பயத்தில் பலர் செத்துக் கொண்டேயிருந்தனர்.

22-10-91 காலை 8 30 மணி

குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் சிவபாதசுந்தரம் முதல்நாள் நேரத்துடனேயே வீட்டுக்குச் சென்றிருந்ததால், அவருக்கு ஆஸ்பத்திரிக்குள் நடந்த 'அனர்த்தம்' தெரியவில்லை மற்றவர்கள் அது பற்றி கூறியபோது கூட அவரால் அதனை நம்பமுடியவில்லை. மூன்று தாதிகளையும் அழைத்துக் கொண்டு

...அந்த அதிகாரி அதற்குமேலும் நடந்த முடிந்த உண்மையை மூடிமறைக்க விரும்பவில்லை.

**11.30 இருக்கும்**

11.30 மணி போல் தான். எமது சக பெண் டாக்டர் ஒருவர் இன்னுமொரு உயர் அதிகாரியிடம் கேட்டுக் கொண்டார். தற்சமயம் உயிருடன் எவராவது எஞ்சியிருந்தால்...... ...களை உயர் அதிகாரிவண்ணம்

...னர் அன்று இரவு இந்திய வானொலியில் "யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரி எந்தவித அசம்பாவிதமோ உயிரிழப்போ இன்றி இந்தியப்படையின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது" என செய்தி உலகத்திற்குச் சொல்லிக்கொண்டிருந்தது. இன்னும் பரிதாபம் என்னவென்றால் இன்று கூட பலர் இவ்வாறு நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

# தற்காலிக ஊழியர் நிரந்தரமாக்கப்படுவர்

(யாழ் பாணம்)

யாழ் பிரதம தபாலகத்தில் தற்காலிக ஊழியர்களாக பணிபுரிந்து வரும் சுமார் 25 பேருக்கு படிப்படியாக நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி ஊழியர்கள் பல காலமாக யாழ் பிரதம தபாலகத்தில் பணிபுரிந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே சமயம், பதிதாக தபாலகத்தில் தற்காலிக ஊழியர்களாக எவரும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## இல. செஞ்சிலுவை உதவி

வடமராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து சாவகச்சேரி பகுதியில் தங்கியிருக்கும் மக்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையினர் ஒரு தொகுதி மேற்பட்ட உணவுப் பொருள்களை நிவாரணமாக வழங்கினர். (75)

## வீட்டில் கொள்ளை

நாயன்மார்கட்டில் உள்ள வீடொன்றை திருடர்கள் காலி செய்துள்ளனர்

அம்பாள் வீதியைச் சேர்ந்த சிவபாதசுந்தரம் என்பவரது வீட்டினுள் நேற்று முன்தினம் இரவு புகுந்த திருடர்கள் அவ்வீட்டிலிருந்த மிளகாய் முதல் ரொக்கபணம் வரை பல்வேறு பொருள்களை திருடிச் சென்றுள்ளனர்.

பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியான உடுபுடவைகள், ஆறாயிரம் ரூபா பணம் மற்றும் அங்கிருந்த உணவுப் பொருட்கள் யாவற்றையும் கதவினை கச்சிதமாக உடைத்து உட்புகுந்து திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர். (ஏ)

# பாலஸ்தீனியருக்கு உதவ படை அனுப்பத் தயார்

## -ஈரான் அறிவிப்பு

(பக்தாத்)

பாலஸ்தீனிய நாட்டை உருவாக்குவதில் இஸ்ரேலுடன் போரிட படை வீரர்களை அனுப்பத் தயார் என்று ஈரான் தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனியருக்கு ஆதரவு திரட்டுவது குறித்து சர்வதேச மாநாட்டில் பேசுகையில் ஈரானின் ஜனாதிபதி ரப்சஞ்சானி இவ்வாறு தெரிவித்தார்.

நாற்பத்தைந்து நாடுகளைச் சேர்ந்த 400 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள்.

மேற்காசிய சமாதான மாநாட்டை ஸ்பெயின் தலைநகர் மாட்றிட்டில் இந்த மாதம் 30 ஆம் திகதி நடத்துவது என்ற முடிவையடுத்து மேற்காசிய சமாதான நடவடிக்கைகள் முன்னேற்றம் அடைந்துவரும் தருணத்தில் ரப்சஞ்சானி இவ்வாறு கருத்து வெளியிட்டு இருக்கிறார்.

# ஆக்கிரமிப்பு பகுதியிலிருந்து இஸ்ரேல் விலக வேண்டும்

## - சிரிய அதிபர்

(டமஸ்கஸ்)

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் இருந்து இஸ்ரேல் விலகிச் செல்ல வேண்டும் பாலஸ்தீனியரின் தேசிய உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் அமைதித் தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என்று சிரிய ஜனாதிபதி ஆசாத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் டமஸ்கஸ் சென்ற பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரபாத்தை சந்தித்தபோது ஆசாத் இதனைத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது சோவியத் வெளியுறவுத்துறை அமைச்சர் பொரிஸ் பான்கினும் உடன் இருந்தார்.

அரபு பிராந்தியத்தில் இருந்து இஸ்ரேல் விலக வேண்டும் என்பதை மொஸ்கோ வற்புறுத்தும் என்றும் பொரிஸ் பான்கின் ஆசாத்துக்கு உறுதியளித்துள்ளார்.

## குறுங்கால கடன்

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்துள்ள சுய தொழில் முயற்சியில் ஈடுபட விரும்புபவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் குறுகிய காலக் கடன் திட்டம் ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளது.

இக்கடன் திட்டத்தின் கீழ் இரண்டாயிரம் முதல் ஐயாயிரம் ரூபா வரையான பணம் கடனாக வழங்கப்படும். இப் பணத்தை தவணை அடிப்படையில் திருப்பிச் செலுத்த முடியும்.

குறிப்பாக இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கே இக்கடன் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (க)

# தடுத்துவைக்கப்பட்ட 42 பேர் இன்று விடுவிப்பு

பல்வேறு காரணங்களுக்காக விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 42 பேர் இன்று காலை பத்து மணிக்கு மக்கள் முன்னணியின் மாவட்டச் செயலகத்தில் வைத்து விடுதலை செய்யப்படவுள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு: ச. சுரேஸ்குமார் (கிளிநொச்சி), அழகுபாலா (கிளிநொச்சி), த. ஜெயக்குமார் (சுன்னாகம்), வே. ஞானராசா (சுன்னாகம்), க. கமலநேசன் (யாழ்ப்பாணம்), வே. மோகனராசா (பருத்தித்துறை), வ. ஞானசேகரம் (யாழ்ப்பாணம்), கா. குகதாசன் (கரவெட்டி), தே. மோகன் (யாழ்ப்பாணம்), ஆ. செல்வக்குமார் (சுன்னாகம்), பொ. இலங்கேஸ்வரன் (யாழ்ப்பாணம்), க. மனோகரன் (கொழும்பு), செ. அந்தோனிப்பிள்ளை (பளை), ந. இளங்கோவன் (கிளிநொச்சி), செ. மாசிலாமணி (உரும்பராய்), செ. ஆனந்தராசா (சுதந்திரபுரம்), கு. பூலோகசிங்கம் (அல்வாய்), செ. வின்சன் (கைதடி), ரா. லோகநாதன் (மானிப்பாய்), இ. நாகராசா (முள்ளியவளை), ஆ. ஜெபதுரைசிங்கம் (பருத்தித்துறை), ஆ. அமலராஜன் (வவுனியா), ஜோ. நிமலன் (நாவற்குழி), ச. மனோகரன் (மட்டக்களப்பு), சி. வடிவேல் (புதுவெட்டுவான்), ப. சிவகணேஸ் (மல்லாவி), இ. அன்ரன் (யாழ்ப்பாணம்), செ. திருஞானம் (மல்லாகம்), அ. அலோசியஸ் (திருமலை), அ. விக்சலாஸ் (பொலிகண்டி), வி. செ. கிறிஸ்ரி [கரையூர்], சி. யோ. நியூட்டன் [திருநெல்வேலி], இ. விக்னேஸ்வரன் (இணுவில்), மு. கணேசரஞ்சன் [பளை], செ. அருளம்பலம் (வேலணை), ரா. கிருஸ்ணகுமார் (கண்டி), க. சுப்பிரமணியம் (கண்டி), கி. ஆம்ஸ்ரோங் பீற்றர் (ஊர்காவற்றுறை), வே. சற்குணராசா (கைதடி), பெ. அருணானந்தம் (நாவற்குழி), சா. அல்போன்ஸ் (உடுப்பிட்டி), ச. துசிபந்தன் (அரியாலை).

# புலிகளின் நடவடிக்கை; வெள்ளை அறிக்கை வேண்டும்

(சென்னை)

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்றை மாநில அரசு விரைவில் வெளியிட வேண்டும் என மீண்டும் தாம் கேட்டுள்ளதாக பாரதிய ஜனதாக் கட்சியின் துணைத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூரில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய கிருஷ்ணமூர்த்தி அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்டு வரும் காவல் துறையினரின் நடவடிக்கைகளால் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்றும், தமிழகத் தீவிரவாதிகளுக்கும், விடுதலைப் புலிகள் ஆதரவு அமைப்புகளுக்கும், நக்சலைட்டுகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இருக்கும் தொடர்புகள் பற்றி முழுமையாகவும் ஆழமாகவும் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# யாழ். பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கீட்டில் பெரும் வெட்டு

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டுக்கான அரசினால் முன்மொழியப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ். பல்கலைக்கழகத்துக்குரிய நிதி ஒதுக்கீடுகள் பற்றி அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இப்பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்கான அடுத்த ஆண்டுக்கான செலவு 7 கோடி 50 லட்சம் என மதிப்பிடப்பட்ட போதிலும் 40 லட்சம் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் அடுத்த ஆண்டுக்கான செலவு 2 கோடி 00 லட்சம் என மதிப்பிடப்பட்ட போதிலும் 20 லட்சம் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கின்றது. கலைப்பீடத்துக்கான அடுத்த ஆண்டுக்குரிய செலவு 2 கோடி 9 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்ட போதிலும் 31 லட்சம் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

சுதந்திரக்கட்சிக்குள் அரசியல் வாரிசாக அநுரா வையா, திருமதி சந்திரிகா குமாரணதுங்காவையா என்பது குறித்தும், சந்திரிகாவை கட்சிக்குள் அனுமதிப்பது பற்றிய விடயம் குறித்தும் இழுபறி ஏற்பட்டுள்ளதாகவும்,

சிறிமாவோ கட்சி அதிகாரங்களையெல்லாம் தனது கைக்குள் வைத்திருப்பதால் கீழ் மட்டத்தினர் மத்தியில் அதிருப்தி நிலவுவதோடு,

அநுராவின் நடவடிக்கைகள் பரவலாக பெரும் அதிருப்தியை பாராளுமன்றத்திற்குள்ளும் கட்சிக்குள்ளும் உண்டாக்கி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஜேர்மனியில் நாஜிகளை பொலிஸ் தேடுகிறது

(பேர்லின்)

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரும் வெளிநாட்டவர்கள் மீது தாக்குதல்களை நடாத்தும் புதிய நாஜிகளைத் தேடி ஜேர்மன் பொலிஸ் கிழக்கு ஜேர்மனி நகரங்களில் 40 மாடிகளில் தேடுதல் நடத்தியது.

42 நாஜிகளுக்கு எதிரான வன்முறைக் குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து கிழக்கு ஜேர்மனியில் மொத்தம் 12 நகரங்களில் தேடுதல் வேட்டை நடாத்தப்பட்டது.

தேடுதலின்போது துப்பாக்கிகள், துப்பாக்கி ரவைகள், கத்திகள், பெருந்தொகையான நாஜி இலக்கியங்கள், துண்டுப்பிரசுரங்கள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலைஞர்மடம் புனர்வாழ்வுச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை (26.10.91) மாலை நான்கு மணியளவில் நாவலர் வீதியிலிருக்கும் சங்கப் பணிமனையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விஸ்தரிக்கப் எடுக்கிறோம் எனவும் அதற்காகவே இராணுவத்தின் முன்னேற்றம் மெதுவாகவும், நிதானமாகவும் உள்ளது என்றும் தெரிவித்தார்.

கடந்த வருடம் கோட்டை முற்றுகையின் போது நடைபெற்ற "ஈகிள் ஒப்பரேஷனு"

# நிலநடுக்கத்திற்கு உ.பிரதேசத்தில் 300 பேர்பலி

(டில்லி)

இந்தியாவிலுள்ள உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் சுமார் 300 பேர் பலியாகியுள்ளனர். மேலும் சுமார் ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். டன மேலும் பலர் இடிபாடு மற்றும் மண் சரிவுகளுக்கிடையே இறந்து கிடக்கலாமென நம்பப்படுகின்றது. இமாசலப் பிரதேசத்திலும் இந்நில நடுக்கத்தின் தாக்கம் உணரப்பட்டுள்ளது. எனினும் புதுடில்லியில் அதிக பாதிப்பு

எம்முனையிலும் கணைகளும், எரிகணைகளும் கூவிச்சென்று வெடிக்கும் சத்தம் குடாநாடெங்கும் கேட்கின்றது. இது ஒரு உளவியல் ரீதியான அச்சுறுத்தல் மட்டுமே என்பதை நீங்கள் உணர வேண்டும்.

எதிரி எமது உயிரினும் மேலான உரிமைப்போரை பல வழிகளில் திட்டமிட்டு அழிக்க முயல்கின்றான். நாங்கள் முனைவிடுவோம். நாங்கள் நெருப்பாற்றைக்கூட நீந்திக் கடக்கக்கூடியவர்கள் என்ற செய்தியை எதிரியின் செவிகளுக்குச் சொல்லி வைப்போம்.

உண்மைச் செய்திகளை நாங்கள் உங்களுக்கு உடனுக்குடன் அறிவித்து வருவோம். மண்டைதீவு வரையும் சிறிலங்கா இராணுவம் முன்னேறியுள்ளது உண்மைதான் இரா...

விமானக்

பெற்ற ''ஈகிள் ஒப்பரேஷனு''டன் இதனை ஒப்பிட்டுப் பேசிய அவர் மண்டைதீவுப் பகுதியை கைப்பற்றியதன் மூலம் யாழ் குடா நாட்டின் இருதயப் பகுதிக்குள் செல்ல விரும்பதாகவும் தெரிவித்தார்.

**இடம்பெயர்ந்த**

மேலும் பலர் வீதிகளில் துவிச்சக்கர வண்டிகளில் குடும்பம்குடும்பமாகஅலைந்து திரிகின்றனர்.

இதேவேளை கடுமையான மழைபெய்துள்ளதால் மக்கள் பெரும் அவஸ்தை நிலையை அடைந்துள்ளனர்

**ஊழியர்களை**

தெரிந்ததே.

இவ் வைத்திய சாலையில் படுக்கை வாட்டில் இருந்து சுமார் நானூறு நோயாளிகள் புறப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (தி

**வட, பொருள்கள்**

பகுதிக்கு கொண்டு செல்லப்பட்ட பொருள்களில் அடங்கும் எனவும் கூறப்படுகிறது

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி ஐ.தே.க. அதிருப்தியாளரான வின்சன்ட் பெரேரா தடை செய்யப்பட்ட இப் பொருள்களை ஏற்றிச் சென்ற ஐந்து லொறிகளுக்கு வவுனியாவில் உள்ள தாண்டிக்குள தடை முகாம் வரை கடந்த மே மாதம் 25 ஆம் திகதி பாதுகாப்பாகச் சென்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

னோர் காயமடைந்துள்ளனர். இந்த நிலநடுக்கத்தால் பல இடங்களில் மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளதோடு வீடுகள், கடைகள் போன்ற கட்டடங்கள்பலவும் இடிந்துவிழுந்துவிட்

**தமிழீழ**

டிருந்த சமயத்திலும்கிரானிலிவீதி, மற்றும் கண்டுக்குளி வரை இராணுவம் முன்னேறியதாகஇதேபோன்றேபல்வேறு உண்மைக்குப் புறம்பான செய்திகளை ஒலிபரப்பி மக்களை பீதியிலும், பதற்றத்திலும் உள்ளாக்கியமை தெரிந்ததே.

இதேவேளை, வானொலி அறிவிப்புக்கள் சில தமிழ் மக்களை லட்சக்கணக்கில் இடம்பெயரவைத்துள்ளது. இதன் மூலம் மக்களின் அன்றாட வாழ்க்கையையும், பொருளாதார அழிவையும் ஏற்படுத்தி விடுதலைப் போரின் தமிழ் மக்களுக்குரிய உறுதியைக் குலைப்பதில் தீவிர அக்கறை காட்டியும் வருகின்றது.

**பதுங்கு குழிகளை**

6அடி முதல் ஏழு அடி வரையான நீளமும் உடையதாகவும் தேவைக்கு ஏற்ற எண்ணிக்கையிலும் அமைக்கப்பட வேண்டும் என்றும் தாக்குதல்கள் நடைபெறும்போது பதற்றமடைந்து சிதறி ஓடாமல் உடனடியாகப் பதுங்கு குழிகளுக்குள் சென்று தாக்குதல்களால் ஏற்படும் அனாவசிய உயிரிழப்புக்களைத் தவிர்க்கும்படியும் கேட்கப்பட்டிருக்கின்றது

புதுடில்லியில் அதிக பாதிப்பு ஏற்படவில்லை. இந்நில நடுக்கம் சுமார் 55 நிமிட நேரம் நீடித்துள்ளது.

இந்நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ எல்லைக் காவல் படையினரும், மத்திய றிசேர்வ் படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## லெப். கேணல் சந்தோசம் சிறுவர் பூங்கா

(யாழ்ப்பாணம்)

முன்னாள் திருமலை மாவட்டத் தளபதி லெப் கேணல் சந்தோசம் அவர்களின் 4 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வும் சந்தோசம் சிறுவர் பூங்கா திறப்பு விழாவும் இன்று அரியாலை தபால் கட்டைச் சந்தியில் பி.ப. 4 மணியளவில் நடைபெறும்.

விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர்கள் உரையாற்றுவார்கள்.

## போர்க்கால சூழ்நிலையில் நமது பணி

''போர்க்கால சூழ் நிலையில் நமது பணிகள்'' தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்றுதிங்கட் கிழமைமாலை 4 00 மணிக்கு நல்லூர்வடக்கு தமிழ்த்தாய் நூலகத்தில் நடைபெறவுள்ளது

இதற்கு தமிழ்த்தாய்மன்ற, மாணவர் மன்ற அனைத்து உறுப்பினர்களும், தமிழ்த்தாய் நூலக அங்கத்தவர்களும் தவறாது சமூகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

**விமானக**

குண்டுகளை வீசித் தாக்குதல்கள் நடாத்தியது. இத்தாக்குதலின் போது க. இரத்தினம் (வயது 87) என்ற வயோதிபப் பெண் உடல் சிதறிப் பலியானார். ம. பாலாம்பிகை (வயது 60), க. ஜெயதேவி (வயது 40), மா. தேவகி (வயது 21) ஆகியோர் படுகாயமடைந்தனர். அப்பகுதியில் இருந்த ஐந்து வீடுகள் பலத்த சேதமடைந்தன. இத்தாக்குதலைத் தொடர்ந்து மாங்கியப்பிட்டிப் பகுதிக்கு விரைந்து வந்த விமானங்கள் மாங்கியப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் உள்ள குடியிருப்புக்கள் மீதும் பல தடவைகள் குண்டுகளை வீசின.

இத் தாக்குதலில் சுகிரன் (வயது 45)என்பவரும் இவரது மகன் அரணி (வயது 6) ஆகிய இருவரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். சுகிரனின் பிள்ளைகளான அர்ச்சனா (வயது 10), சம்சரத்வேணி (வயது 6) ஆகியோர் பலத்த காயமடைந்துள்ளனர். இவர்களது வீடும் அங்கு இருந்த கார், மோட்டார் சைக்கிள், உழவு இயந்திரம் ஆகியனவும் சேதமடைந்தன. (க)

**செஞ்சிலுவை**

ர்தியில் இருந்து கவியர் தாக்குதல் நடாத்தப்பட்டிருக்கின்றது.

நேற்றுமாலை 6-30 மணியளவில் மேற்படி வாகனத் தொடர் இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரண வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் நீர்வேலிப் பகுதியில் வைத்து இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது சேதம் எதுவும் இல்லை. (க)

பொய் வதந்திகளைப் பரப்பி போராளிகளின் மேல் 'பிரியமின்மையை' ஏற்படுத்த அரசின் கைக்கூலிகளாக இங்கே செயற்படும் புல்லுருவிகள் முயன்று வருகின்றனர் 'அங்கே இராணுவம் இறங்கி விட்டது' 'இங்கே இராணுவம் முன்னேறி வருகின்றது' 'புலிப்பெடியள் பின்வாங்கிவிட்டார்கள்' என்ற மாதிரியான கதைகளை எங்கும் கேட்கக்கூடியதாக இருக்கின்றது. இதன் பின்னணியில் ஒரு சதிகாரக் கும்பலே திட்டமிட்டபடி இயங்கி வருகின்றது. எனவே வதந்திகளை நம்பி ஓடித்திரிந்து, உருக்குலைந்து அகதியாகி அலைந்து அல்லலுறாதீர்கள்.

எம்மண்ணை நேசிக்கும் மனப்பக்குவத்தினால் தானே இன்னும் இந்த மண்ணிலே நீங்கள் கால் பதித்து நிற்கின்றீர்கள். 'மென்பனி தாவும் கனடாவின் தெருக்களில்' மாலைநேர உலாத்தலிலும் பார்க்க குண்டுவீச்சுக்கு மத்தியிலும் தாயகபூமியில் சாய்ந்து கிடக்கும் சுகத்தை விரும்பியுள்ள தேசபக்தர்கள்தானே நீங்கள். எங்கே ஓடப்போகின்றோம்? வாழ்வோ சாவோ எது வரினும் எமக்கு இந்த மண்ணிற்தானே வரும் போராடு! என்று காலம் எங்கள் கைகளுக்குக் கட்டளையிட்டுள்ளது அவ்விட்ட கட்டளையை ஏற்றுத்தானே நாங்கள் களத்தில் நிற்கின்றோம் பிறந்த [illegible]? கால் வலிக்க அலைந்து திரியலாமா?

குண்டு விழ விழக் குடியிருப்போம். வீடு இடிந்து மேடாகட்டும், அதிலிருந்து

ஞுவ முடிப்பதுவும் இல்லாத பொட்டல் வெளியிலே போராடி எங்கள் பலத்தை ஏன் இழக்க வேண்டும்? அங்கே எதிரியை எதிர்கொள்ள பலம் மிக்க கடற்படை ஒன்றைக் கட்டி எழுப்பவேண்டும் கடற்புலிப் படைப்பிரிவை கடல்சூழ்ந்த தேசங்களில் நாம் எதிரியை எதிர்கொண்டு இலக்கு வைக்க முடியும். எனவே இன்று கொஞ்சம் தள்ளிநின்று அவதானித்துக் கொண்டிருக்கிறோம் அவ்வளவுதான்!

எனவே சைக்கிளிலும், தலைச்சுமையாகவும் நீங்கள் பாரம்தூக்கிகளாக இரவுபகலென்று பாராமல் அலைவதைப் பார்க்கும்போது எமக்கு வேதனையாக இருக்கின்றது வதந்திகளை நம்பி வண்டில் கட்டிக்கொண்டு வடமராட்சியில் இருந்து வலிகாமத்துக்கும் வலிகாமத்திலிருந்து தென்மராட்சிக்குமாக அலைந்து நடப்பதைப் பார்க்க எமக்குத் தாங்க முடியாமலிருக்கின்றது

நிலவுக்குப் பயந்து பரதேசம் போவதுபோல, குளிரிலிருந்து தப்புவதற்காக குடியிருக்கும் வீட்டைக் கொளுத்துவது போல, ஒன்றுக்கும் அஞ்சி நாங்கள் ஓடமுடியாது நிலையாக நின்று கொண்டு எதிரியைச் சந்திக்கத் தயாராகுவோம்! அழிவுகள் எமக்குப் புதியவைகள் அல்ல ஆனால் எமது அடுத்த தலைமுறையின் வாழ்விற்காகவாவது எமது பாதங்களைப் பலப்படுத்தி அந்தந்த இடங்களிலேயே நிமிர்ந்து நிற்போம்! நிமிர்ந்து நிற்போம்!! எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.